RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 190 | ஜூலை.16 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# காமராஜர் வழியில் வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்" : முதல்வர் விஜய்

சென்னை: ஜூலை.16-

"எளிமை, நேர்மை, தியாகம், தொலைநோக்குப் பார்வை, மக்கள் சேவை போன்ற உயரிய பண்புகளால் இந்திய அரசியலில் தனி முத்திரைப் பதித்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்." என அவரது 124வது பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தமிழகத்தின் கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்களை அமைத்து கல்விக்கண் திறந்து, வறுமையால் வாடிய ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்க மதிய உணவுத் திட்டம் தந்த மாமேதை, ஏழைப் பங்காளர், பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளில் அவரது தியாகத்தையும் சாதனைகளையும் நினைவு கூர்ந்து கல்வி வணக்கத்தை செலுத்துகிறேன்.



கல்விச்சாலைகள் மட்டுமின்றி, நீர்த்தேக்கங்களையும், முக்கிய தொழிற்சாலைகளையும் உருவாக்கி, விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சியின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர்.

எளிமை, நேர்மை, தியாகம், தொலைநோக்குப் பார்வை, மக்கள் சேவை போன்ற உயரிய பண்புகளால் இந்திய அரசியலில் தனி முத்திரைப் பதித்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம். கர்மவீரர் காமராஜரின் புகழ் ஓங்குக." எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக சென்னை அண்ணா சாலையில் பல்லவன் இல்லம் முன் வைக்கப்பட்டிருந்த காமராஜர் திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் புடைசூழ மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்க மாநில மாநாடு
### அமைச்சர் என்.ஆனந்த் பங்கேற்க அழைப்பு

சென்னை: ஜூலை.16-

ஊரக வளர்ச்சித் துறை தொழி லாளர்கள் சங்க மாநில மாநாட்டில் பங்கேற்க, அமைச்சர் என்.ஆனந்துக்கு சங்க நிர்வாகிகள் நேற்று அழைப்பு விடுத்தனர்.



தூய்மை பணியாளர்களின் ஊதிய உயர்வு, பணிநிரந்தரம் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் இரண்டாம் மாநில மாநாடு, திருச்சி மாவட்டம் மணப்பாறையில் வரும் ஆக.21, 22ம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இரண்டு நாள் நடைபெறும் மாநாடானது 21ம் தேதி பொது மாநாடாகவும், 22ம் தேதி பிரதிநிதிகள் மாநாடாகவும் நடைபெற இருக்கிறது.

இதில் ஏஐடியுசி, ஊரக வளர்ச்சித்துறை ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்கம், ஊரக உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம், தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் என பல்வேறு சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகளும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், எம்பி கே.சுப்பராயன் உள்ளிட்ட நிர்வாகிகளும் பங்கேற்கவுள்ளனர்.

பொது மாநாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் என்.ஆனந்த் பங்கேற்று நிறைவுரை வழங்குகிறார். இதையொட்டி, சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் என்.ஆனந்தை தமிழ்நாடு ஊரக வளர்ச்சி தொழிலாளர் சங்க நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து, மணப்பாறையில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தனர்.

இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் என்.ரவி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.லெனின், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ராமாநிதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## "லாக் அப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியான நடவடிக்கை தேவை"
### பிரேமலதா வலியுறுத்தல்

சென்னை: ஜூலை.16-

"மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்து தவெக அரசு லாக் அப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், ரூ.25 லட்சம் நிவாரணத் தொகையையும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு அருகே உள்ள ஈத்தன்காடு பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரிவர்மன் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் விற்றதாகக் கூறி ஜூலை 9 அன்று தென்தாமரைக் குளம் போலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஜூலை 13 அன்று காலை சிறையில் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். கைதானபோது நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த மாற்றுத்திறனாளி இளைஞர் உயிரிழந்திருப்பது பெரும் அதிர்ச்சியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அவரது உடற்கூறு பரிசோதனையில் அவரது உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்ததாகத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று காவல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தமிழகத்தில் பல லாக் அப் படுகொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ள நிலையில், மீண்டும் இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பது தமிழ்நாடு முழுவதையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த விவகாரத்தில் மூன்று காவல்துறையினரை பணியிடை நீக்கம் செய்திருப்பது மட்டுமே போதுமான தீர்வாகாது. இனி தமிழகத்தில் எங்கும் லாக் அப் படுகொலைகள் நடைபெறாத வகையில் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டத்தை மீறியவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் நீதித்துறைக்கு மட்டுமே உள்ளது.

சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு ஒருவரின் உயிரைப் பறிக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. மாற்றம் என்று கூறி ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த அரசு, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் மூலம் எந்தவிதமான மாற்றத்தையும் மக்களிடம் ஏற்படுத்தவில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

எனவே, காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தமிழக முதல்வர், இந்தக் கொடூரமான குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது எந்தவித பாரபட்சமும் இன்றி அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், ரூ.25 லட்சம் நிவாரணத் தொகையையும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

## ஹூண்டாய் சமூக பொறுப்புணர்வு திட்டத்தில் 18 அரசு பள்ளிகளுக்கு 900 இருக்கைகள்: அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன் வழங்கினர்

சென்னை: ஜூலை.16-

ஹூண்டாய் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூ.70 லட்சம் செலவில் 18 அரசு பள்ளிகளுக்கு 900 இருக்கைகள் வழங்கப்பட்டன.

ஹூண்டாய் மொபிஸ் சிஎஸ் ஆர் எனப்படும் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்தில் மாணவர்களின் பயன்பாட்டுக்காக 18 அரசுப் பள்ளிகளுக்கு ரூ.70 லட்சம் செலவில் 900 இருக்கைகளை (ஙிமீஸீநீலீ ஞிமீடளீ) வழங்க முன்வந்தது.

அரசுப் பள்ளிகளுக்கு இருக்கைகள் வழங்கும் நிகழ்ச்சி எழும்பூர் பிரசிடென்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது. இதில் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக்கல்வி அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர் கலந்துகொண்டு 18 அரசுப் பள்ளிகளுக்கு இருக்கைகளை வழங்கினர். பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அவற்றை பெற்றுக்கொண்டனர்.



அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், "அடுத்த 10 ஆண்டுக்குள் அரசுப் பள்ளிகளை நாட்டின் தலைசிறந்த பள்ளிகளாக உருவாக்குவோம். பள்ளிகளில் பிற பாடங்களைப் போன்று உடற்கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

உடற்கல்விக்கு வாரம் இரு பாடவேளைகள் மட்டும் இருப்பது போதாது. பிற பாடங்களைப் போன்று உடற்கல்விக்கும் தினமும் வகுப்புகள் நடைபெற வேண்டும்" என்றார் அமைச்சர் ராஜ்மோகன் பேசும்போது, "மாணவர்களுக்குத் தேவையான அனைத்து விஷயங்களையும் தவெக அரசு செய்யும்.

அதற்கு பதிலாக, மாணவர்கள் தங்கள் தன்னம்பிக்கை, தமிழ் ஆர்வம், தலைமைத்துவப் பண்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் மாலதி ஹெலன், பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பி.ஏ.நரேஷ், ஹூண்டாய் மொபிஸ் நிறுவனப் பொதுமேலாளர் ஹூமின் ஹோ, ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## எண்ணூர் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் : அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் உறுதி

சென்னை: ஜூலை.16-

அனல் மின் நிலைய பாதிப்புகள் குறித்து மீனவர்களுடன் அமைச்சர் நிர்மல்குமார் கலந்தாய்வு கூட்டம் நடத்தினார். இந்த கூட்டத்தில் எண்ணூர் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் நேற்று மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் எண்ணூரை சுற்றியுள்ள நெட்டுக்குப்பம், தாழங்குப்பம் உள்ளிட்ட 8 கிராம மீனவர்களின் நீண்டகால கோரிக்கைகள் குறித்து மீனவ சங்க பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, மாசுகட்டுப்பாடு மற்றும் பொதுநலக் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.



தொடர்ந்து கூட்டத்தில் பேசிய அமைச்சர் நிர்மல்குமார் கூறியதாவது: வேலைவாய்ப்பு தொடர்பாக, அரசால் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய, அனைவருக்கும் சமநீதியை வழங்கக் கூடிய ஒரு நிரந்தர நடைமுறை உருவாக்கப்படும்.

இதற்காக, எட்டு மீனவ கிராமங்களின் பதிவு செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் மீனவ குடும்பங்களின் விவரங்கள், உண்மையாக மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் குடும்பங்கள், பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அதிகாரிகளுடன் விரிவாக ஆய்வு செய்து ஒரு செயல்பாட்டு வழிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மின்சார வாரியத்தில் ஏற்கனவே நீண்ட காலமாக பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் உரிமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

அனைவருக்கும் நியாயமான மற்றும் சட்டபூர்வமான தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சுற்றுச்சூழல், சாம்பல் அகற்றுதல், நீர்வழிப் பாதைகள், ஆற்றுப் பராமரிப்பு, ஒப்பந்தப் பணிகள் உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளும் தனித்தனியாக பட்டியலிடப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் மூலம் ஆய்வு செய்து, உடனடியாக மேற்கொள்ளக் கூடிய பணிகள் விரைவுபடுத்தப்படும்.

எண்ணூர் பகுதி மீனவர்களின் நலன், வாழ்வாதாரத்துக்கு தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இவ்வாறு அவர் கூறினார்.

## 'ஃப்ரிட்ஜ் வாங்க கூப்பன்' சி.விஜயபாஸ்கர், தேர்தல் ஆணையம் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூலை.16-

வாக்காளர்கள் பிரிட்ஜ் வாங்க கூப்பன் கொடுத்து முறைகேட்டில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட தேர்தல் வழக்கில் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மற்றும் தேர்தல் ஆணையம் பதில் அளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்த முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தொகுதியில் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்ட சி.விஜயபாஸ்கர், 1,05,773 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தவெக வேட்பாளர் முருகேசனை விட 62,073 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.



இந்த நிலையில், திமுக சார்பில் போட்டியிட்ட தோல்வியுற்ற கே.கே.செல்லப்பாண்டியன் சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.விஜயபாஸ்கர் வெற்றி பெற்றதை எதிர்த்து தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கில் வெற்றி பெற்ற சி.விஜயபாஸ்கர் தேர்தல் பிரச்சாரத்தின் போது வாக்காளர்கள் தனக்கு ஆதரவாக வாக்களிக்க கூறி ரூ.10,000 மற்றும் ரூ.2,000க்கான கூப்பன்களை விநியோகித்தார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் வாக்காளர்கள் ஃப்ரிட்ஜ் வாங்க கூப்பன்களை விநியோகித்து தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே சி.விஜயபாஸ்கர் வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி என் செந்தில்குமார், வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு கூப்பன்களை வழங்கி முறைகேட்டில் ஈடுபட்டதை மனுதாரர் சுட்டிக்காட்டி பதிவு செய்தார். மேலும் வழக்கு குறித்து சி.விஜயபாஸ்கர் மற்றும் தேர்தல் ஆணையம் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை மூன்று வாரத்திற்கு தள்ளி வைத்துள்ளார்.

# பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் தொழில்நெறி திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி, ஜூலை.16-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு பொறி யியல் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கு தொழில்நெறி திறன் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் நேற்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்தையொட்டி நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கவுரிசங்கர் தலைமை வகித்தார். அரசு பொறி யியல் கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். தனித்திறன் மேம்பாட்டு பயிற்சியாளர் நிமலன் மரகதவேல் மாணவர்களிடையே பல்வேறு தனித் திறன்கள் குறித்த முக்கியத்துவத்தினை விளக்கினார். மாவட்ட திறன் அலுவலர் சுந்தரம் பொறியியல் மாணவர்களுக்கான தற்போதைய வேலை வாய்ப்புகள் மற்றும் நுழைவுத் தேர்வுகள் விரிவாக பேசினார். பணிநியமன அலுவலர் மோகன்தாஸ், துறைத்தலைவர் தலைவர் (மெக்கானிக்கல்) திருமால் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பேசியதாவது: இன்றைய இளைஞர்களது வேலை பெறும் திறனை அதிகரிக்கும் விதமாக, பல்வேறு திறன் பயிற்சிகளின் முக்கியத்துவம் கருதி இளைஞர்களிடையே திறன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் ஜூலை மாதம் 2வது வாரம் அனுசரிக்கப்படுகிறது. மேலும், பொறியியல் மாணவர்கள் தங்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய, பாடப் புத்தகங்களைத் தாண்டி தொழில்நுட்ப மற்றும் மென்மையான திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். கல்லூரி காலத்திலேயே நிறுவன ங்களில் பயிற் சிகள் மேற்கொள்வது தொழில் முறை அனுபவத்தைத் மாணவர் களுக்கு தருகிறது. மாணவர்களுக்கு தமிழக அரசு இலவசமாக, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளிக்கிறது. இதனை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார். இதில் 235 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பெருங்களத்தூர் மேம்பாலத்திற்கு காமராஜர் பெயர் சூட்ட வேண்டும்

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கோரிக்கை





தாம்பரம், ஜூலை.16-

பெருங்களத்தூர் மேம்பாலத்திற்கு பெருந்தலைவர் காமராஜரின் பெயரை சூட்ட வேண்டும் என்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். பெருங்களத்தூர் ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள காமராஜர் சிலைக்கு, அவரது 123வது பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சி யினர் மற்றும் அமைப்புகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி மன்றம், பெருங்களத்தூர்-பீர்க்கன் காரணை அனைத்து வியாபாரிகள் சங்கம், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு காமராஜர் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, பெருங்களத்தூர் வியாபாரிகள் சங்கத் தலைவர் பாலமுருகன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப் பட்டதுடன், ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

பின்னர் செய்தி யாளர்களிடம் பேசிய தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநில கூடுதல் செயலாளர், தமிழக வெற்றி கழகத்தின் கொள்கை தலைவர்களில் ஒருவராக காமராஜர் முன்னிறுத்தப்படுவதால், அவரது நினைவைப் போற்றும் வகையில் பெருங்களத்தூர் மேம்ப ாலத்திற்கு காமராஜர் பெயரை தமிழக அரசு சூட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் மாதவன், சுப்புராமன், பார்த்திபன், தினேஷ், குரு, ராஜா மற்றும் பெருங்களத்தூர்-பீர்க்கன்காரணை குடியிருப்போர் சங்கத் தலைவர் மகேந்திரபூபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







# அனகாபுத்தூரில் அ.தி.மு.க. இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்

அனகாபுத்தூர், ஜூலை.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த அனகாபுத்தூரில் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி ச. ஜோசப் விஜய் மற்றும் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் அறிவுறுத்தலின்படி, செங்கல்பட்டு மாவட்ட கழகச் செயலாளர் மின்னல் வி.குமார் அவர்களின் தலைமையிலும், அனகாபுத்தூர் பகுதி கழகச் செயலாளர் எஸ்.எம்.மதன், மாவட்ட இணை செயலாளர் மதன்குமார் அவர்களின் முன்னிலையிலும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த அனகாபுத்தூர் பகுதி கழக பொருளாளர் வி.செந்தில் குமார், அண்ணா தொழிற்சங்க துணைச் செயலாளர் அசோக்குமார், இளைஞரணி இணைச் செயலாளர் சந்தோஷ், இளைஞரணி துணைத் தலைவர் மோகன், வர்த்தக அணி செயலாளர் ராஜா சிங் மற்றும் வர்த்தக அணி இணைச் செயலாளர் செல்வம் ஆகியோர் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்வில் இணைந்த நிர்வாகிகள், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுடன் இணைந்து கழக வளர்ச்சிக்கும், மக்கள் நலப் பணிகளுக்கும் அர்ப்பணிப்புடன் செயல்பட உறுதியளித்தனர்.




# சிறுமியின் புகைப்படத்தை தவறாக சமூக வலைதளத்தில் பதிவிட்ட வழக்கு

# குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை; ரூ.4,000 அபராதம்

## POCSO உள்ளிட்ட சட்டப் பிரிவுகளில் மொத்தம் 12 ஆண்டுகள் 3மாதங்கள் தண்டனை; ஏககாலத்தில் அனுபவிக்க நீதிமன்றம் உத்தரவு

சிவகங்கை, ஜூலை.16-

சிவகங்கையில் சிறுமியின் புகைப்படத்தை தவறாக சமூக வலைதளத்தில் பதிவிட்டது தொடர்பாக சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட POCSO மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்ட வழக்கில், பரமக்குடியைச் சேர்ந்த வாழவந்தான் என்ற வாசு மீதான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டன.

இதையடுத்து POCSO நீதிமன்றம், பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் மொத்தம் 12 ஆண்டுகள் 3 மாதங்கள் சிறைத் தண்டனையும் ரூ.4,000 அபராதமும் விதித்தது. அனைத்து தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்பட்டுள்ளதால், குற்றவாளி 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.4,000 அபராதமும் அனுபவிக்க வேண்டும்.

இவ்வழக்கில் திறம்பட விசாரணை மேற்கொண்டு குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த காவல் அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற காவலர்களை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. சிவ பிரசாத் பாராட்டினார்.



■ உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் மூலம் ஊத்தங்கரை வட்டம் வேங்கடதாம்பட்டி ஊராட்சியில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் விவசாயி ஆறுமுகம் அவர்கள் தோட்டக்கலை துறையின் மூலம் சொட்டுநீர் பாசனம் மற்றும் டிராகன் புரூட்ஸ் பயிரிட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் பார்வையிட்டு விவசாயிடம் கலந்துரையாடினார். வட்டார வளர்ச்சி அலுவலர் உமா சங்கர், இணை இயக்குநர் தோட்டக்கலை (பொறுப்பு) குணவதி மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




# பழனி கோவில் நில மோசடி வழக்கை சிபி.சிஐ.டிக்கு மாற்றப்பட்டுள்ளது

பழனி, ஜூலை.16-

பழனி தண்டாயுதபாணி சுவாமி மடத்திற்குப் பாத்தியப்பட்ட, சுமார் 1.4 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோவில் நிலம் கடந்த 2025 செப்டம்பர் மாதம், 60 ஆண்டுகால ஆக்கிரமிப்பில் இருந்து அறநிலையத்துறையால் அதிரடியாக மீட்கப்பட்டது. தற்போது பக்தர்களின் இலவச வாகன நிறுத்தமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த நிலத்தின் மீதுதான் இந்த மெகா மோசடி அரங்கேறியுள்ளது.

நீதிமன்ற உத்தரவுகள் அமலில் உள்ள நிலையிலும், அதையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, கடந்த ஜூலை 6ம் தேதி (2026) போலி ஆவணங்கள் மூலம், வெறும் 2 கோடி ரூபாய்க்கு இரண்டு தனிநபர்களின் பெயரில் இந்த நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.இந்த முறைகேடு வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, முறைகேடான பதிவுக்குத் துணைபோன கூடுதல் பொறுப்பு சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இதில் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் அதிகாரிகள் மீது பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் FIR பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ள பெரும் புள்ளிகளைக் கண்டறியவும், வழக்கின் முக்கியத்துவத்தைக் கருதியும், உடனடியாக சிபிசிஐடி (CBCID) போலீசாருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது



## ஊத்துக்கோட்டையில் பேரூர் காங்கிரஸ் கமிட்டி சார்பில்

# செயலாளர் டாக்டர். K.N.செல்வம் தலைமையில் காமராஜர் 124வது ஆண்டு பிறந்த நாள் விழா

திருவள்ளூர், ஜூலை.16-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூர் காங்கிரஸ் கமிட்டி சார்பில் காமராஜரின் 124வது ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு பேரூராட்சி செயலாளர் Dr.K.N.செல்வம் தலைமையில் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி, கொடியோற்றி பொதுமக்களுக்கு இணைப்புக்கள் வழங்கி மரியாதை செலுத்தினார்கள் இந்நிகழ்ச்சியில் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.கோவிந்தசாமி, பொருளாளர் சிவாச்சாரி, துணைத்தலைவர் மணி, மற்றும் கழகத்தின் மூத்த முன்னோடி புலவர் நடராஜன், மகளீர் அணிஅம்சா, பரிமளா, மற்றும் மாவட்டதுணைச் செயலாளர் ஆபிரகாம், கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தி சிறப்பித்தனர்



## கும்மிடிப்பூண்டி உருக்காலையில் பாய்லர் வெடித்து ஸ்ரீவெங்கடேஸ்வரா மருத்துவமனையில்

# சிகிச்சை பெற்றுவரும் தொழிலாளர்களை சந்தித்து அமைச்சர் குமார், ஆட்சியர் ச.கவிதா ஆறுதல்

மாதவரம், ஜூலை.16-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்சாலையில் அமைந்துள்ள இரும்பு உருக்காலையில் தொழிலாளர்கள் பணியில் இருந்த போது, திடீரென முன்தினம் இரவு ராட்சத பாய்லர் வெடித்து பெரும் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் பணியில் இருந்த வடமாநில தொழிலாளர் ரவி என்பவர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதுமட்டுமல்லாமல் பணியில் இருந்த தொழிலாளர்கள் 4 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு செங்குன்றம் அடுத்த நல்லூர் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்சிட்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்சிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 3 தொழிலாளர்களை செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் குமார், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா, கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி பத்திரிகையாளர்களிடம் அமைச்சர் பேட்டி அளித்தார்.

பின்னர் சிகிச்சை குறித்து மருத்துவமனை டீன் மருத்துவர் சபீதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் வெங்கடேசன், துணைத்தலைவர் டி.சி. சக்தி உள்ளிட்டோரிடம் கேட்டறிந்தனர்.

இதில் மாவட்ட சுகாதார அலுவலர் (திருவள்ளூர்) மரு.பிரியா ராஜ், இணை இயக்குநர் பொற்செல்வி, சார் ஆட்சியர் (பொன்னேரி) ப.அப்துல் ராசிக், பொன்னேரி வட்டாசியர் ஜெய்கர் பிரபு உள்ளிட்ட வருவாய் அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம் கூடலூர் தோட்டத் தொழிலாளர் தொழிற் பயிற்சி நிலையத்தில் டைட்டன் நிறுவன வளாக வேலைவாய்ப்பு நேர்காணல்

கூடலூர், ஜூலை.16-

நீலகிரி மாவட்டம் கூடலூர் தேவர்சோலை சாலையில் செயல்பட்டு வரும் தோட்டத் தொழிலாளர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வளாக வேலைவாய்ப்பு நேர்காணல் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பயிற்சி நிலைய முதல்வர் ஷாஜி எம். ஜார்ஜ் தலைமை வகித்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் இயங்கி வரும் Titan Engineering and Automation Limited நிறுவனத்தின் சார்பில் நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டு அதிகாரி விமல்ராஜ் மற்றும் தரக் கட்டுப்பாடு மேலாளர் எஸ். பாலமுருகன் ஆகியோர் நேர்காணலை நடத்தி, மாணவர்களுக்கு நிறுவனத்தின் வேலை வாய்ப்பு வாய்ப்புகள்,



பணிச்சூழல், தொழில் வளர்ச்சி மற்றும் எதிர்கால முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தனர்.

இந்த வளாக நேர்காணலில், பயிற்சி நிலையத்தின் இரண்டாம் ஆண்டு பொருத்துநர் (Fitter), மின்கம்பியாளர் (Wireman), எலக்ட்ரிக்கல் அண்டு எலக்ட்ரானிக்ஸ் டெக்னீஷியன் (Electrical & Electronics Technician) மற்றும் கணினி பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் 80 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

நேர்காணலின் முடிவில் தகுதியான 60 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஊதியத்துடன், இலவச தங்குமிடம் மற்றும் உணவு வசதியும் வழங்கப்படும் என்று நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வளாக வேலைவாய்ப்பு நேர்காணல், தொழிற்பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தொழிற் துறைக்கும் திறமையான இளைஞர்களை உருவாக்கும் முயற்சியாக அமைந்தது.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி சதவீதம் உயர்த்துவதற்கான ஆலோசனைக் கூட்டம்

தேனி, ஜூலை.16-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி சதவீதம் உயர்த்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்துரையாடி,

கடந்த ஆண்டு தேர்ச்சி சதவீதம் குறைந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் காரணங்கள் குறித்து கேட்டறிந் ததுடன், மாணவர்களுக்கு பேருந்து வசதி உள்ளிட்ட தேவைகளையும், இடர்பாடுகளையும் கண்டறிந்து அதை சரிசெய்து, கற்றல் திறன் குறைவான மாணவர்களை கண்டறிந்து கூடுதலாக சிறப்பு வகுப்பு நடத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை வழங்கினார்.

மேலும், ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களின் வருகை குறைவதை கண்டறிந்தால் அதற்குரிய காரணங்களை கண்டறிந்து நாள்தோறும் மாணவர்களை பள்ளிக்கு வரவைப்பதற்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறைவான கற்றல் திறனுடைய மாணவர்களை கண்டறிந்து பெற்றோர்களை தொடர்பு கொண்டு, வீட்டில் மாணவர்கள் படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி தொடர்ச்சியாகப் படிக்க வலியுறுத்த வேண்டும். அதேபோல் சிறப்பு தேர்வு வைத்து பிற மாணவர்களுக்கு இணையாக மதிப்பெண் பெற செய்ய வேண்டும்.

பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை போன்ற நிலை ஏற்படும் பட்சத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக சரிசெய்து கொள்வதுடன், தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துவதற்கு ஏற்ப ஆசிரியர்கள் திட்டமிட்டு பாடம் நடத்த வேண்டும். குறிப்பாக, வரும் கல்வியாண்டில் தேர்ச்சி சதவீதம் குறைந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 100 % தேர்ச்சி பெற வேண்டும். அதேபோல் நடப்பாண்டில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகள் தொடர்ந்து அந்நிலையை தக்க வைத்து வரும் கல்வியாண்டிலும் தேர்ச்சி சதவீதத்தில் முதன்மை மாவட்டங்களில் தேனி மாவட்டமும் பெற்றுள்ளது என்ற நிலையை உருவாக்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் புதிதாக உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தின் மூலம் காவல்துறையினர் கண்காணிப்புப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு வருகிறார்கள். மேலும், பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், மாலை நேரங்களில் பள்ளிகள் முன்பாக கண்காணிப்புப் பணியிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.இக்கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் திருமுருகன், மாவட்ட கல்வி அலுவலர்கள் சண்முகவேல் (மெட்ரிக்), சுருளி (இடைநிலைக்கல்வி), நாகலெட்சுமி (தொடக்கக் கல்வி), மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர் (பள்ளிக்கல்வி) ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்தாய்வுக் கூட்டம்

தேனிஅல்லிநகரம், ஜூலை.16-

தேனி மாவட்டம் அல்லிநகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள வட்டார வள மைய அலுவலகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் மூலம் குழந்தைகளுக்கு வழங்கும் ஊட்டச்சத்து உணவு, பராமரிப்பு மற்றும் முன்பருவக் கல்விக் குறித்து குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையேற்று பெற்றோர்களிடம் கலந்துரையாடி தெரிவிக்கையில்,




ஒவ்வொரு குழந்தைகளின் எதிர்காலம் ஆரோக்கியமாக இருப்பதற்கு மிகவும் அடிப்படையாக விளங் குவது முன்பருவக் கல்வியாகும். அதனடிப்படையில், நாள் தோறும் குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு அனுப்பி வைப்பது மட்டுமின்றி குழந்தைகள் எந்த அளவில் முன்பருவக் கல்வி கற்கிறார்கள், உடல் ஆரோக்கியம் மற்றும் பழக்கவழக்கங்கள் எவ்வாறு உள்ளது என்பதை நாள்தோறும் கண்காணித்திட வேண்டும். அதேபோல், ஆசிரியர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள அணுகுமுறை குறித்தும் பெற்றோர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும், ஆசிரியர்களும் அங்கன்வாடி மையத்தில் பயிலும் ஒவ்வொரு குழந்தைகளையும் தங்களது குழந்தைகள் போல் பராமரித்து முன்பருவக் கல்வி மற்றும் ஊட்டச்சத்து உணவுகளை வழங்குவதுடன் தாய்மார்களுக்கும் உடல் ஆரோக்கியம் குறித்து உரிய விழிப்புணர்வுகளை வழங்கி, வயதிற்கேற்ப எடை குறைவாக உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சரியான மருத்துவப் பரிசோதனைப் பெற வழிகாட்டுவதுடன், தேவையான ஊட்டச்சத்துக் களை வழங்கி பெற்றோர் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் சிறந்த வழிகாட்டியாக இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன்,அறிவுரை வழங்கினார்,இக்கூட்டத்தில் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள்) ரேவதி, வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் செல்வி சித்ரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நல்லூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் திறப்பு விழா

மாதவரம், ஜூலை.16-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை மாநில கல்லூரியில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் ரூ.139.47 கோடி மதிப்பீட்டில் மருத்துவ கட்டடங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் பயன்பாட்டினை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தை மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு ரிப்பன் வெட்டி குத்து விளக்கேற்றி மரக்கன்றுகளை நட்டு வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, பின்னர் கர்ப்பிணிப் பெண்களுக்கு பெட்டகங்களை வழங்கினார். இதில் சோழவரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் காளியம்மாள், புதூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெயதீபா, அலமாதி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் தினேஷ்குமார், ஊராட்சி செயலர் லோகநாதன், தவெக மாவட்டப் பொருளாளர் மனோஜ், நிவேதா, ஒன்றிய செயலாளர்கள் மேகநாதன், செல்வக்குமார், முகிலன் உள்ளிட்ட கிராம சுகாதார செவிலியர், மாவட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# பழனியில் த.வெ.க., சார்பில் காமராஜரின் பிறந்தநாள் விழா

திண்டுக்கல், ஜூலை.16-

திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையம் அருகே உள்ள மயில் இரவுண்டானாவில் கல்வி வள்ளல் காமராசரின் 124 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவர்களில் ஒருவரான காமராசரின் புகழை போற்றும் விதமாக தமிழக வெற்றிக் கழகம் சார்பாக காமராஜர் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு மலர் தூவி பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றன..

இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் மூத்த நிர்வாகி மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சஞ்சய், சுரேஷ், விக்டர், சிராஜுதீன், நிவாஸ், தௌபிக், ஆஷிக், பிரசன்னகுமார், இராகுல், சங்கர், சிவா, தினேஷ், கௌதம் கண்ணன், அனஸ் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் ஒன்றாக இணைந்து காமராஜரின் புகழ் பாடும்விதமாக பல்வேறு கோஷங்களை எழுப்பி மலர் தூவி காமராஜருக்கு புகழ் சேர்த்தனர்.



## குன்னூரில் மினி பேருந்துகளில் கூடுதல் கட்டண வசூல்

# நீலகிரி மாவட்ட வட்டார போக்குவரத்துத் துறை அதிரடி சோதனை மற்றும் அபராதம்

குன்னூர், ஜூலை.16-

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இயக்கப்படும் மினி பேருந்துகளில் திடீரென உயர்த்தப்பட்ட கட்டண உயர்வை தொடர்ந்து, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பிரபாகரன் தலைமையில் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு குன்னூர் பகுதியில் தீவிர அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இந்த ஆய்வின் போது, அரசு விதிமுறைகளை மீறி பொதுமக்களிடம் கூடுதல் கட்டணம் வசூலித்தது கண்டறியப்பட்டது.




விதியை மீறிய 8 மினி பேருந்துகளுக்கு தலா 9,000 ரூபாய் வீதம், மொத்தம் 72,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

முறையான ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமம் இன்றி இயக்கப்பட்ட பேருந்துகளுக்கு 28,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ஒரே நாளில் விதிமுறைகளை மீறிய மினி பேருந்துகளுக்கு மொத்தம் ரூ. 1,00,000 அபராதம் விதிக்கப்பட்டு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து போக்குவரத் துத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கையில், "பொதுமக்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பேருந்துகள் மீது தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். விதிகளை மீறுவோர் மீது அபராதம் மட்டுமின்றி, வாகன உரிமமும் ரத்து செய்யப் பரிந்துரைக்கப்படும்" என எச்சரித்துள்ளனர். சோதனை மற்றும் கடுமையான நடவடிக்கை குன்னூர் வட்டார பேருந்து உரிமையாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




# ஊத்துக்கோட்டை லைன்ஸ் கிளப் சார்பில் காமராஜரின் 124ம் ஆண்டு பிறந்தநாள் விழா

திருவள்ளூர், ஜூலை.16-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை லயன்ஸ் கிளப் சார்பில் காமராஜர் 124வது ஆண்டு பிறந்த நாளில் லைன்ஸ் கிளப் சார்பில் தலைவர் நி.ஷி.சிட்டிபாபு, செயலாளர் ஷி.சரவணன், பொருளாலர் ஸி.சுரேஷ், தலைமையில் சங்க முன்னோடிகள் லயன் நி.ஷி.பழனி, லயன்வசந்தகுமார், லயன் நடராஜன், லயன் தமிழ்ச்செல்வன் வழக்கறிஞர் லயன் திலீப்குமார், முன்னிலையில் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அரசினர் ஆண்கள் மேல்நிலைபள்ளிக்கு அன்பு பெட்டகம் வழங்கி

அதனை தொடர்ந்து சங்க அலுவலகத்தில் காமராஜரின் திருவுருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கன்னி குளம் கிராமத்தைச் சேர்ந்த தாய் தகப்பனை இழந்த கன்னி செல்வி என்ற மாணவிக்கு கல்லூரி படிப்பதற்கு முதலாம் ஆண்டு கல்வி உதவி தொகையாக ரூபாய் 22,000ம் வழங்கி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நுழைவு வாயிலில் லயன் தோட்டத்தில் மரக்கன்றுகள் நட்டனர் இந்நிகழ்வில் ஊத்துக்கோட்டை லயன்ஸ் கிளப் சங்கத்தை சேர்ந்த சங்க மூத்த பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## ஆர்.காவனூர் பெருந்தலைவர் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில்

# கர்ம வீரர் பெருந்தலைவர் கு.காமராஜர் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது

இராமநாதபுரம், ஜீலை.16-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.காவனூரில் பெருந்தலைவர் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் கல்விக்கண் திறந்த கு.காமராஜரின் 124வது பிறந்தநாள் விழா நாடார் உறவின்முறை சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

காமராஜரின் திரு உருவ படத்திற்கு மன்றத்தின் பொருளாளர் மு.பழனி தலைமையில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதனை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் மற்றும் நினைவு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

# மாம்பாக்கத்தில் லஞ்சம் வாங்கிய த.வெ.க.,வைச் சேர்ந்த ஊராட்சி தலைவர் வீராசாமி நீக்கம்!

செங்கல்பட்டு, ஜூலை.16-

மாம்பாக்கத்தில் லஞ்சம் வாங்கிய தவெகவைச் சேர்ந்த ஊராட்சி தலைவர் வீராசாமி கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். செங்கல்பட்டு ஊராட்சி தலைவரான வீராசாமி, ஒப்பந்ததாரரிடம் ரூ.1.3 லட்சம் லஞ்சம் வாங்கும் வீடியோ வெளியானது. தவெக நிர்வாகி வீராசாமி லஞ்சம் வாங்கிய வீடியோ வெளியாகி வைரலான நிலையில் கட்சியில் இருந்து இருந்து நீக்கப்பட்டுள்ளார்.









## தேவகோட்டை இராம்நகர் ஜோசப் நடுநிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா

சிவகங்கை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம்நகர் ஜோசப் நடுநிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. இப்பள்ளியின் தலைமையாசிரியை அருட்சகோதரி ரெஜினா மேரி அனைவரையும் வரவேற்று பேசினார். இப்பள்ளியின் முன்னாள் மாணவர் தற்போது தேபிரித்தோ மேல்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் ஆரோக்கிய ஈசாக் தலைமை வகித்து கல்விக் கண் திறந்த காமராஜர் என்ற தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார். இப்பள்ளியின் தாளாளர் வின்சென்ட் அமல்ராஜ் முன்னிலை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜோஸ் பின் ஜீலியட் வாழ்த்துரை வழங்கினார். மாணவ, மாணவிகளுக்கு பேச்சு, கவிதை, கட்டுரை,ஓவியம், மாறுவேடப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர் மன்றத் தலைவர் மருத்துவர் பிரியா, இப்பள்ளி மாணவ, மாணவிகள் இவர்களது பெற்றோர்கள், அனைத்து ஆசிரியர், ஆசிரியைகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் ஆசிரியர் ஜோசப் ரத்தினம் நன்றி கூறினார்..

## தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு வழிகாட்டி ஆசிரியர் பயிற்சி முகாம்





காளையார்கோவில், ஜூலை.16-

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது பள்ளி மாணவ மாணவிகளின் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் கடந்த 31 ஆண்டுகளாக தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு என்ற செயல் திட்டத்தினை அமல்படுத்தி வருகிறது. தங்களுடைய சுற்றுப்புறங்களில் உள்ள அறிவியல் சார்ந்த ஒரு பிரச்சனையை எடுத்து அதற்கு அறிவியல் பூர்வமாக தீர்வு காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். மூன்று மாதம் ஆய்வை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கும் மாணவ மாணவிகளுக்கு மத்திய அரசு "குழந்தை விஞ்ஞானிகள்" என்ற பட்டத்தினை வழங்குகிறது. பல்வேறு அமைப்புகள் அறிவியல் சார்ந்த ஆராய்ச்சியை பள்ளி மாணவர்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு இந்த செயல் திட்டமே முன்மாதிரியாக உள்ளது. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் இந்த முயற்சிக்கு ஆரம்ப காலம் முதல் துணையாக தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இருந்து இந்த ஆய்வுத் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் கொண்டு சேர்க்கிறது. மாணவ மாணவிகளை ஆய்வில் ஈடுபடுத்தும் பொருட்டு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவது வழக்கம். இந்த வருடத்திற்கான மாவட்ட அளவிலான முதல் நாள் பயிற்சி முகாம் சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற முகாமை அந்நிறுவனத்தின் முதல்வர் முனைவர் முருகன் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சிவகங்கை காளையார் கோவில் மானாமதுரை இளையான்குடி தேவகோட்டை கண்ணங்குடி ஆகிய ஆறு ஒன்றியங்களைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமிற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். காளையார் கோவில் ரோட்டரி கிளப் தலைவர் வின்செண்ட் சார்லஸ் தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார் கோவில் கிளைத் தலைவர் வீரபாண்டி முன்னிலை வகித்தனர். தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவற் கொடியோன் வரவேற்புரை வழங்கினார். தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு மாநில கருத்தாளர் பேராசிரியர் முனைவர் கோபிநாத் பயிற்சி அளித்தார். சிவகங்கை மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன பேராசிரியர்கள் முனைவர் உஷா, முனைவர் சூசை ஆரோக்கிய சிறு மலர், பரமேஸ்வரன், சரளா, கியாமளா ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு நன்றியுரை ஆற்றியதுடன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கவும் செய்தார்.



## கர்மவீரர் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

திருச்சிராப்பள்ளி, ஜூலை.16-

திருச்சிராப்பள்ளியில் கர்மவீரர் காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு, மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பு சார்பில் திருச்சி மாவட்டம், திருவரம்பூர் தாலுகா, BHEL பாய்லர் வளாகத்தில் அமைந்துள்ள கர்மவீரர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ், மாநில மகளிர் அணி துணை ஆலோசகர் ஈஸ்வரி, மாநில மகளிர் அணி செயலாளர் ராஜேஸ்வரி, மாநில மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் ரேவதி, திருச்சி மாவட்ட தலைவர் சரவணன் மற்றும் இதயத்துல்லிஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருப்பூர் மாவட்டத்திலுள்ள
## நல்லதங்காள் ஓடை குத்தகைக்கு விட மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

திருப்பூர், ஜூலை.16-

ஈரோடு மாவட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருப்பூர் மாவட்டத்திலுள்ள நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்தின் மீன்பிடி உரிமையினை 5 ஆண்டு காலத்திற்கு மீன்பிடி குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் இயக்குநர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www.tntenders.gov.in என்னும் இணையதள முகவரியில் பார்வையிடவும், இந்த இணைய வழிஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தபுள்ளி படிவம் மற்றும் இதர படிவங்களை மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் [19494/F3/2024/09] [2026_AHDF_684226_1] என்ற ஏல அறிவிப்பு எண்ணினை உள்ளீடு செய்து கட்டணமின்றி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழி ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி 21.07.2026ம் தேதி அன்று காலை 9.00 மணிவரை சமர்ப்பிக்கலாம்.ஏலம் தொடர்பான தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு Inlandfisheries15@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியும் அல்லது ஈரோடு மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். ஏல அறிவிப்பில் மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் மேற்காணும் இணையதளம் மூலம் மட்டுமே அறிவிக்கப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்.

## மானாமதுரையில் வீட்டின் முன் நிறுத்தியிருந்த விலை உயர்ந்த 'டியூக்' பைக் திருட்டு
### பூட்டை உடைத்து திருடிச் செல்லும் இருவரின் சிசிடிவி காட்சிகள் வெளியானதால் பரபரப்பு





மானாமதுரை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் அருகே வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த விலை உயர்ந்த 'டியூக்' இருசக்கர வாகனத்தை மர்ம நபர்கள் இருவர் திருடிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனந்தவல்லி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த ரித்தீஷ், தனக்குச் சொந்தமான டியூக் பைக்கை நேற்று இரவு வீட்டின் முன்பு நிறுத்தியிருந்தார். நள்ளிரவில் அங்கு வந்த இருவர், பைக்கின் பூட்டை உடைத்து வாகனத்தை திருடிச் சென்றதாக கூறப்படுகிறது.

காலையில் பைக் காணாமல் போனதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ரித்தீஷ், அருகிலிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தார். அதில் இருவர் பைக்கை திருடிச் செல்லும் காட்சிகள் பதிவாகியிருந்தன.

இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில், சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு பைக் திருட்டில் ஈடுபட்டவர்களை போலீசார் தேடி வருகின்றனர். இந்த திருட்டுச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





## திருப்பூர் 15 வேலம்பாளையம் அரசு மருத்துவமனையில் சிறுவன் பலி

திருப்பூர், ஜூலை.16-

திருப்பூர் மாவட்டம் 15 வேலம்பாளையம் பல லட்சத்தில், அரசு மருத்துவமனை.பிரம்மாண்டமாக கட்டப்பட்டது. ஆனால் இந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களுக்கு சரியான மருத்துவம் கிடைப்பதில்லை. பகல் நேரத்திலும், இரவு நேரத்திலும், மருத்துவர்கள் இருப்பதில்லை. மேலும் ஒரு சில செவி லியர்களை வைத்து. பொது மக்களுக்கு மருத்துவம் செய்து வருகின்றனர். இவ்வாறு அப்பகுதி பொதுமக்களும். சமூக ஆர்வலர்களும் குறை கூறி வருகின்றனர். இரு நாட்களுக்கு முன்பு ஹரிஷ் என்ற சிறுவனுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால். அவரது தாய் தந்தை அவர்கள் 15 வேலம்பாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஹரிஷ் சிறுவனுக்கு முறையாக சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால் சிறுவன் இறந்து விட்டான். இதை கேள்விப்பட்ட பெற்றோர்களும் அவர்களது உறவினர்களும். அரசு ஆஸ்பத்திரி முன்பு இப்பகுதி வார்டு கவுன்சிலர் செல்வராஜ் மற்றும் அஇஅதிமுக மணி மற்றும் , சர்வ கட்சியினரும் சேர்ந்து. மருத்துவமனை முன்பு சிறுவன் ஹரிஷ் இறந்ததை முன்னிட்டு கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். மேலும் இது போன்ற தவறு நடக்காமல் இருக்க வேண்டுமென. அரசு மருத்துவமனை முன்பு கோஷம் எழுப்பினர்

இதில் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மேலும் அங்கு ஹரிஷ் மற்றும் அவர்களது சொந்தங்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## சேம்பார் நடுநிலைப்பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா; கர்மவீரர் காமராஜர் பிறந்தநாள் கோலாகல கொண்டாட்டம்
### பேச்சுப்போட்டி, கலைநிகழ்ச்சிகளில் மாணவர்கள் அசத்தல்







காளையார்கோவில், ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாணவ, மாணவிகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் நடத்தப் பட்டதுடன், கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது.

விழாவில் பேசிய தலைமை ஆசிரியர் சுரேஷ், ஏழை, எளிய மற்றும் கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக காமராஜர் ஆற்றிய பணிகளை எடுத்துரைத்து, மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

காளையார்கோவில் ஒன்றிய துணை ஆணையாளர் மற்றும் ஊராட்சி மன்றச் செயலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பள்ளி மாணவி ஆரோ ஆசிதா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக் குமார், முருகன், சகாயசெல்வி, பாரதி மலர், தனபாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப் புகள் வழங்கப் பட்டன. நிறைவாக ஆசிரியர் முத்துக்குமார் நன்றி கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161